## மற்றவர்கள் கூறும் வழி, மற்றவர்களின் சிந்தனை மற்றும் மற்றவர்களைப் பார்ப்பதில் இருந்து விடுபட்டவர் ஆகுங்கள், மேலும் மற்றவர்களுக்கு உபகாரம் செய்யுங்கள்!

இன்று பாப்தாதா நாலாபுறத்திலுமுள்ள தந்தையின் விசேஷமான குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். பாரதத்தினரையும் அல்லது வெளிநாட்டினரையும் அவர் எந்தவொரு மூலையில் இருந்தாலும் அனைத்து விசேஷ ஆத்மாக்களை பாப்தாதா அருகில் பார்த்துக் கொண்டிருக்கிறார். பாப்தாதாவிற்கு தன்னுடைய விசேஷக் குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சி ஏற்படுகிறது. எப்படி குழந்தைகள் உங்களுக்கு தந்தையைப் பார்த்து குஷி ஏற்படுகிறது இல்லையா. குஷி ஏற்படுகிறது, அதனால் தான் ஓடி வந்திருக்கிறீர்கள் இல்லையா? அப்படி பாப்தாதாவிற்கும் என்னுடைய ஒவ்வொரு குழந்தையும் விசேஷ ஆத்மா என்று குஷி ஏற்படுகிறது. வயதானவராக இருந்தாலும், படிப்பறி வில்லாதவராக இருந்தாலும், சிறு குழந்தைகளானாலும், இளைஞர்களானாலும் இல்லறத்தில் இருப்பவர்களானாலும் இவர்கள் முழு உலகின் எதிரில் விசேஷமானவர்கள் எவ்வளவு தான் பெரிய அதிசயம் காண்பிக்கும் விஞ்ஞானியாக இருந்தாலும், சந்திரன் வரை சென்றடையச் செய்பவராக இருந்தாலும் தந்தையின் விசேஷக் குழந்தைகளின் எதிரில், அவர்களும் ஒன்றும் அறியாதவர்கள் ஐந்து தத்துவங்களையும் தெரிந்து கொண்டார்கள். அவற்றின் மீது வெற்றி அடைந்திருக்க வில்லை ஆனால் இங்கு நீங்கள் யார்? என்று சிறு குழந்தையைக் கேட்டாலும் என்ன பதில் சொல்லுவார். நான் ஆத்மா என்று தான் கூறுவார் இல்லையா? ஆத்மா எங்கிருக்கிறது என்று கேட்டால் அதையும் கூறுவார். மேலும் விஞ்ஞானிகளிடம் ஆத்மா என்றால் என்ன என்று கேளுங்கள். ஆத்மாவின் ஞானத்தை இதுவரை தெரிந்து கொள்ள முடியவில்லை. அப்படி உலக சரித்திரத்தின் கணக்குப்படி எவ்வளவு தான் பெரியவர்களாக இருந்தாலும், இந்த உலக கணக்குப்படி விசேஷமானவர்களாக இருந்தாலும் யார் தன்னைத் தெரிந்து கொள்ளவில்லையோ, அவர்களை விட இங்குள்ள ஐந்து வயது குழந்தை கூட விசேஷமானவராக ஆகிவிட்டார். உங்களுடைய தொடக்க காலத்தின் ஒரு மிக நல்ல பாடல் இருக்கிறது. அது எந்த பாடல் என்று நினைவிருக்கிறதா? எவ்வளவு தான் பெரிய பணக் காரானாலும், சுவாமியாக இருந்தாலும், ஆனால் தந்தையைத் தெரிந்திருக்கவில்லை என்றால் என்ன தான் தெரிந்திருக்கிறார்? எனவே அந்த மாதிரியான விசேஷ ஆத்மாக்கள் நீங்கள். இங்கு படிப்பறி வில்லாத வயதான மாதர் இருக்கிறார் மற்றும் இன்னொரு பக்கம் நல்ல மகாத்மா இருக்கிறார் ஆனால் வயதான மாதர், நான் பரமாத்மாவை அடைந்து விட்டேன் என்று கூறுவார் ஆனால் அந்த மகாத்மாவோ பரமாத்மாவை அடைவது மிகக் கடினம் என்று கூறுவார் ஆனால் இங்கு 100 வயதானவரும் நிச்சய புத்தி இருக்கிறது என்றால் அவரும் என்ன கூறுவார்? நீங்கள் தேடிக் கொண்டேயிருங்கள். நாங்களோ அடைந்து விட்டோம் என்று கூறுவார். அப்படி மகாத்மாவும் உங்கள் எதிரில் ஒன்றுமே இல்லை. இல்லறத்தில் இருப்பவர்கள் நாங்கள் ஜோடியாக இருந்தும், ஒரே கட்டிலில் படுத்திருந்தும், தூய்மையாக இருக்கிறோம், ஏனென்றால் எங்களுக்கு இடையே

தந்தை இருக்கிறார் என்று கூறுவார்கள். மேலும் மகாத்மாக்கள் என்ன கூறுவார்கள்? பஞ்சும் நெருப்பும் சேர்ந்திருப்பது என்பதோ அசம்பவம் ஆகும் என்று கூறுவார்கள். மேலும் உங்களைப் பொறுத்தவரை என்ன நிலைமை இருக்கிறது? தூய்மையாக இருப்பது கடினமா அல்லது சுலபமா என்று இல்லறத்தில் இருப்பவர்கள் கூறுங்கள். சுலபமா அல்லது சில நேரம் கடினமாகி விடுகிறதா? யார் உறுதியாக இருக்கிறார்களோ அவர்கள் பெரிய சபை எதிரிலும் அல்லது என்ன தான் ஆனாலும் தூய்மையோ எங்களுடைய சுயதர்மம் (இயற்கையான குணம்) என்று கூறுவார்கள் பரதர்மம் (மற்றவர்கள் சொல்வதனால்) இல்லை, ஆனால் சுயதர்மம் ஆகும். அப்படி தன்னுடையது சுலபமாக இருக்கும் மற்றவர்களுடையது கடினமாக இருக்கும். தூய்மையின்மை பரதர்மம் ஆகும், ஆனால் தூய்மை சுயதர்மம் ஆகும். அப்படி தன்னுடைய விசேஷத்தை தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா? ஏனென்றால் புதியவர்களும் அதிக மானவர்கள வந்திருக்கிறார்கள் இல்லையா? ஆனால் எவ்வளவு புதியவர்கள் இருக்கிறார்களோ அவர்கள் அனைவரும் தூய்மை என்ற விசயத்தில் உறுதி யானவர்கள் தான் இல்லையா? சில குழந்தைகள் இந்த மாதிரியும் செய்கிறார்கள். எதுவரை தந்தையை சந்திப்பதற் கான ஒரு வருடம் முடிவடையவில்லையோ, இந்த நியமம் மிகவும் உறுதியானது என்று அனைவருக்கும் தெரியும். அப்படி மதுபன்னிற்கு வரும் வரை சரியாக இருக்கிறார்கள் ஆனால் பாபாவை பார்த்துவிட்டோம், வந்து சேர்ந்து விட்டோம் என்று, பிறகு சிலர் திரும்பிச் சென்ற பிறகு அலட்சியமாகவும் ஆகி விடுகிறார்கள் ஆனால் தூய்மையாக இருப்போம் என்ற உறுதிமொழியை யாரிடம் கொடுத்தோம் என்று யோசித்துப் பாருங்கள். தந்தையிடம் செய்தீர்கள் தான் இல்லையா? தந்தையின் கட்டளை இல்லையா. அப்படி தந்தையிடம் உறுதிமொழி கொடுத்து பின்பு ஒருவேளை அலட்சியமானவர்களாக ஆனீர்கள் என்றால் நஷ்டம் யாருக்கு ஏற்படும். பிராமண பரிவாரத்திலோ ஒருவர் செல்கிறார், பத்து பேர்கள் வருகிறார்கள் ஆனால் நஷ்டம் பலஹீனமான அந்த ஆத்மாக்களுக்கு ஏற்படுகிறது. எனவே, யாரெல்லாம் முதல் தடவையாக வந்திருக்கிறார்களோ அவர்கள் தந்தையின் வீட்டிலோ வந்து சேர்ந்து விட்டீர்கள், இதுவோ பாக்கியத்தின் விசயமாகும் ஆனால் அதிர்ஷ்ட்டத்தின் ரேகையை ஒருபொழுதும் குறைக்காதீர்கள். அதிர்ஷ்ட்டத்தை அதிகரிக்க வேண்டும்.

நல்லது. யாரெல்லாம் வந்திருக்கிறீர்களோ அனைவரின் பெயரும் பதிவேட்டிலோ இருக்கவே இருக்கிறது. ரிஜிஸ்டரில் தன்னுடைய பெயரை உறுதியாக எழுதியிருக்கிறீர்களா அல்லது கொஞ்சம் கொஞ்சம் பலஹீனமாகவா? நல்லது. புதியவர்கள் யார் வந்திருந்தாலும் எங்கிருந்து வந்திருந்தாலும், டீச்சர்களிடமோ பட்டியல் இருக்கவே இருக்கிறது. மேலும் தினசரி வருகைப் பதிவேட்டில் எழுது கிறீர்களா இல்லையா? யார் தினசரி பதிவேட்டை எழுத வில்லையோ அந்த மாதிரியான சென்டர் யாராவது இருக்கிறீர்களா? டீச்சர்கள் உண்மையைக் கூறுங்கள். சில நேரம் (எழுதுவதற்கு முன்பு) தூக்கம் வந்திருக்கக்கூடும் சில நேரம் உடல் சரியில்லாமல் இருந்திருக்கலாம் சில நேரம் வகுப்பிற்கு வந்து சேர முடியாமல் இருந்திருப்பார்கள் என்றாலும் சரி பதிவேடு குறிக்கப்படுகிறதா? யார் தினசரி பதிவேட்டை எழுதுகிறார்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். நல்லது. ஒவ்வொரு நாளுமா அல்லது சில நேரமா? அல்லது இரண்டு. மூன்று மாதங்கள்

ஆகி விடுகின்றதா? அனைத்து ஆசிரியை களும் பாஸாகி விட்டீர்கள். எனவே கை தட்டுங்கள். புதியவர்களுக்கு முதலில் கொஞ்சம் போதை இருக்கிறது. பின்பு மெது மெதுவாக குறைந்து விடுகிறது. அப்படி புதியவர்கள் யாரையெல்லாம் அழைத்து வந்திருக்கிறீர்களோ, சகோதர்கள், சகோதரிகள், அவர்களைப் பற்றி, நிலைத்திருக்கிறார் களா அல்லது வெளியுலகைச் சுற்றச் சென்று விட்டார்களா என்ற இந்த ரிசல்ட்டை மூன்று நான்கு மாதங்கள் கழித்து எழுதுங்கள். ஏனென்றால் சிலர் சுற்றுவதற்கும் சென்று விடுகிறார்கள். இரண்டு வருடங்கள் மாயாவின் யாத்திரை செய்து விட்டு பின்பு இங்கு வந்து சேர்ந்து விடுகிறார்கள். அப்படி ரிசல்ட்டில் இரண்டே வார்த்தைகள் எழுதுங்கள். 60 பேர் வந்தார்கள், 40 பேர்கள் இருக்கிறார்கள். இந்த இரண்டு வார்த்தைகளை மட்டும் விசேஷமாக இரத்தன் மோகினியின் (தாதி) பெயரில் தனியாக எழுதுங்கள். வெளியில் (கவரில்) பிரம்மா குமாரிகள் என்று எழுதுங்கள், உள்ளே அல்ல. அப்பொழுது இந்தக் கடிதம் இந்த விசயத்திற்கானது என்று புரிந்து கொள்வார்கள். இல்லையென்றால் ஈஷுவிடம் (தாதி) அதிகமான கடிதங்கள் வந்து விடுகின்றன. எத்தனை விசேஷ ஆத்மாக்கள் தன்னுடைய விசேஷங்களை காண்பிக்கிறார்கள் என்று பார்க்கலாம்.

குடும்பத்தில் கூட குழந்தை பிறக்கிறது என்றால் அனைவரும் என்ன கூறுகிறார்கள். நீண்ட ஆயுளுடன் வாழ வேண்டும் என்று கூறுவார்கள். அதே போல் பாப்தாதாவும் விசேஷ ஆத்மாக்களின் அழியாத விசேஷத்தைப் பார்க்க விரும்புகிறார். கொஞ்ச காலத்திற்காக இன்றி, ஒரு வருடம் இருந்தார், இரண்டு வருடம் இருந்தார் என்று அப்படியில்லை. அழியாமல் இருப்பவர்களுக்குத் தான் அழியாத பிராப்தி கிடைக்கிறது. அப்படி மாதர்களும் உறுதியாக இருக்கிறீர்களா? ஏனென்றால் நீங்கள் ஒரு வருடக் குழந்தையாக இருந்தாலும் இரண்டு வருடம் அல்லது நான்கு வருடக் குழந்தையாக இருந்தாலும் முடிவோ ஒரே நேரத்தில் தான் இருக்கும் இல்லையா? விநாஷமோ ஒரே நேரத்தில் சேர்ந்தே ஏற்படும் இல்லையா. எனக்கு இரண்டு வருடம் தான் ஆகியிருக்கிறது, நானும் வெள்ளி விழா கொண்டாட வேண்டும். அதன் பிறகு விநாஷம் ஏற்படட்டும் என்று கூறுவீர்களா? இதுவோ நடக்காது இல்லையா? எனவே பிற்காலத்தில் வருபவர்களுக்கு இன்னும் முன்னேறிச் செல்ல வேண்டும். கொஞ்ச காலத்தில் மிகுந்த சம்பாத்தியம் செய்ய முடியும். இருந்தபோதிலும் உங்களுக்கு முயற்சி செய்வதற்கான நேரம் கிடைத்திருக்கிறது. வரும் நாட்களில் இந்த நேரமும் கிடைக்காது. இப்பொழுது தாமதம் என்ற அறிவிப்பு பலகை போடப்பட்டு இருக்கிறது என்று ஏற்கனவே கூறினோம் இல்லையா? ஆனால் மிகவும் தாமதம் என்ற அறிவிப்பு பகை இன்னும் போடப்படவில்லை. அப்படி நீங்கள் அனைவரும் அதிர்ஷ்டசாலிகள். உங்களுடைய பாக்கியத்தை நினைவில் வைத்துக் கொண்டே முன்னேறிச் செல்ல வேண்டும். மற்ற எந்த விசயத்திலும் செல்ல வேண்டாம். குழந்தைகளுடைய முயற்சி செய்யும் நேரம் ஏன் வீணாகச் செல்கிறது என்று பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார். யாரும் விரும்புவதில்லை. அனைவரும் தன்னுடைய நேரம் பயனுள்ளதாக வேண்டும் என்று தான் விரும்பு கிறார்கள். ஆனால் இடையிடையே ஆங்காங்கே அரை மணி நேரம் சிலருக்கு 15 நிமிடம் 5 நிமிடம் வீணாகச் சென்று விடுகிறது. அதற்கான காரணம் என்ன? பெரும்பான்மையினரின் முயற்சி குறைவாக அல்லது தொய்வாக ஆகி விடுகிறது என்றால் அதற்கான மூன்று காரணம் இருக்கிறது என்று இன்று பாப்தாதா பார்த்தார். ஏற்கனவே கூறியிருக்கிறோம்,

இது புது விசயம் அல்ல ஆனால் வைர விழாவில் விசேஷமாக என்ன கவனம் கொடுக்க வேண்டும் என்று பாப்தாதா முன்பாகவே கூறுகிறார். அப்படி மூன்று காரணங்கள் இருக்கின்றன.

பிராமண வாழ்க்கையில் சென்று கொண்டிருக்கும் போதே ஸ்ரீமத்துடன் மற்ற ஆத்மாக்கள் கூறும் வழியையும் கலந்து விடுகிறார்கள். ஏதாவது ஒரு விசயத்தைக் கூறிவிடுகிறார். மேலும் நீங்கள் கூறுபவரோ நல்லவர், உண்மையான மகாரதி மேலும் உங்களுக்கு அவர் மேல் நம்பிக்கையும் இருக்கிறது என்று நினைக்கிறீர்கள், அந்த மாதிரி யாராவது உங்களுக்கு ஏதாவது விசயத்தை கூறுகிறார் என்றால், அதன் மேல் உங்களுக்கு ஆர்வமும் வந்து விடுகிறது. செய்தியோ நன்றாக இருக்கிறது... எப்படி உலகத்து விசயங்கள் பிடித்திருக்கிறது இல்லையா? அதே போல் பிராமண உலகத்தின் செய்தியும் பிடித்திருக்கிறது என்றால் நீங்கள் அவர் மேல் நம்பிக்கை வைத்து விசயத்தை கேட்டு விட்டீர்கள் என்றால் உங்களுக்குள் சென்று விட்டது. அதை நீங்கள் தவிர்க்கவில்லை. சில விசயங்கள் உண்மையாகவும் இருக்கும், செய்தி உண்மையானதாகவும் இருக்கும், அனைத்தும் பொய்யானவைகளாக இருப்பதில்லை. சில உண்மையானவைகளும் இருக்கின்றன, ஆனால் உங்களுக்கு தந்தையின் கட்டளை என்ன? பரவாயில்லை இந்த மாதிரி செய்திகளைக் கேளுங்கள் என்பதா கட்டளை? இல்லை. இதற்கும் உங்களுக்கும் சம்மந்தம் இல்லை, அது சுவாரஸ்யமான செய்தி தான், அதை நீங்கள் ஒன்றும் செய்ய முடியாது. நீங்கள் கேட்க மட்டும் செய்தீர்கள் என்றாலும் அந்தச் செய்தி புத்தியிலோ சென்றது, நேரம் வீணானதாக ஆனதா அல்லது இல்லையா? மேலும் தந்தையின் ஸ்ரீமத்தில் மற்றவர்கள் சொல்லும் வழியை கலந்து விட்டீர்கள். ஏனென்றால் கேட்டும் கேட்காதீர்கள் என்பது தான் தந்தையின் கட்டளை. அப்படி இருக்கும்பொழுது நீங்கள் ஏன் கேட்டீர்கள்? அதன் பழக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறீர்கள். உதாரணமாக ஒரு தடவை உங்களுக்கு செய்தியைக் கூறினார். உங்களுக்கும் மிகவும் பிடித்திருந்தது, புது விசயமாக இருந்தது, இந்த மாதிரியும் நடக்கிறது என்ற இந்த விசயமும் தெரிந்து விட்டது ஆனால் ஒருவேளை நீங்கள் ஒரு தடவை அவருடைய விசயத்தைக் கேட்டீர்கள் என்றால், அடுத்த தடவை அவர் எங்கு செல்வார்? உங்களிடம் தான் வருவார். நீங்கள் அவருக்காக குப்பைத் தொட்டி ஆகி விட்டீர்கள் இல்லையா? அந்த மாதிரியான விசயங்கள் என்னென்ன இருக்குமோ அவற்றை உங்களிடம் வந்து தான் கூறுவார். ஏனென்றால் நீங்கள் அவர் சொல்வதைக் கேட்டீர்கள். எனவே ஒன்று அவருக்குப் புரிய வையுங்கள் அல்லது அந்த மாதிரியான விசயங்களிலிருந்து அவரையும் விடுவியுங்கள். கேட்டு ஆர்வத்தை அதிகரிக்காதீர்கள் ஆனால் ஒருவேளை நீங்கள் கேட்கிறீர்கள் என்றால் சொல்பவரையும் நிரந்தரமாக இந்த விசயத்தில் முற்றுப் புள்ளி இடவைக்கும் அளவிற்கு உங்களிடம் சக்தி இருக்க வேண்டும். உங்களுக்குள்ளும் முற்றுப்புள்ளி வைத்துவிட வேண்டும். எவரைப் பற்றி செய்தி கேட்டீர்களோ அவர் மேலுள்ள பார்வையில், எண்ணத்தில் கூட வெறுப்புணர்வு முற்றிலும் இருக்க வேண்டாம். இந்த அளவு உங்களில் சக்தி இருக்கிறது என்றால் இது கேட்பதாக ஆகவில்லை, அவருக்கு நன்மை செய்ததாக ஆனது ஆனால் பெரும்பான்மையினரிடம் இப்படித் தான் பார்க்க முடிந்தது. கொஞ்சம் கொஞ்சம் குப்பை ஒன்றாகச் சேர்ந்து சேர்ந்து இந்த வெறுப்புணர்வு அல்லது நடத்தையில் வித்தியாசம் வந்து விடுகிறது. வேறு எதுவும் நடக்காவிட்டாலும் அந்த

ஆத்மாவிற்காக சேவை செய்யக் கூடிய பாவனை இருக்காது. சுமையான நிலை இருக்கும் இதைத்தான் ஸ்ரீமத்தில் பரமத்தை மற்றவர்கள் வழியை கலப்பது என்பதாகும். செய்தியையோ பாப்தாதா கூட கேட்கிறார், ஆனால் என்ன நடக்கிறது? பெரும்பான்மை யோரின் உள்நோக்கம் மாறி விடுகிறது. சொல்வதிலும் கூட உள்நோக்கம் மாறிவிடுகிறது. ஒருவர் வந்து கூறுகிறார். இவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்தார்கள் என்று நான் பார்த்தேன் மற்றும் ஒருவர் சொன்னதைக் கேட்ட பிறகு இன்னொருவர் கூறுகிறார். அப்படியில்லை. நின்று கொண்டு தான் இருந்தார்கள் ஆனால் மற்றவர் சொன்னது போல் வெகு நேரம் நின்று கொண்டிருக்கவில்லை, இப்படி இன்னொன்று சேர்ந்து விட்டது பிறகு மூன்றாமவர் வந்து சொல்வார். இவர்களோ அந்த மாதிரி செய்வதே இல்லை என்று. ஆக எவ்வளவு மாறி விடுகிறது. அவர்களின் பாவனை என்னவாக இருந்தது மற்றும் விசயங்களில் உள்நோக்கம் எவ்வளவு மாறிவிடுகிறது. அப்படி இந்த பரமத் வாயு மண்டலத்தை கெடுத்து விடுகிறது. அப்படி நேரம் வீணாவதற்கான ஒரு காரணம் பரமத் மற்றும் இன்னொரு காரணம் பரசிந்தனை (மற்றவர்களைப் பற்றி சிந்திப்பது) ஒருவரிடம் விசயத்தை கேட்டீர்கள் என்றால் அதை 8 -10 பேருக்கு சொல்லாமல் இருப்பது என்பதே நடக்க முடியாது. ஒருவேளை யாராவது வெளிநாட்டில் இருந்தால் கூட அவருக்கு கடிதம் மூலம் இங்கு மிகுந்த புது விசயங்கள் நடந்திருக்கிறது நீங்கள் வருவீர்கள் இல்லையா அப்பொழுது அவசியம் சொல்வேன் என்று எழுதுவார்கள். அப்படியானால் இது என்னவாக ஆனது? பரசிந்தனை உதாரணமாக நீங்கள் நான்கு பேர்களுக்கு கூறினீர்கள். அந்த நான்கு பேர்கள் அந்த ஆத்மா மேல் வைத்த பாவனையை கெடுத்து விட்டீர்கள் இல்லையா? மேலும் பரசிந்தனை தொடங்கியது என்றால் மிக வேகமாகவும் மற்றும் வெகு காலமும் இருக்கும்.

பரசிந்தனை ஒரிரு வினாடியில் முடிந்து விடாது. யாருக்காவது ஞானம் கூறுகிறீர்கள் என்றால் ஆர்வத்தை ஏற்படுத்துவதற்காக கதை ரூபத்தில் கூறுங்கள் என்று பாப்தாதா கூறுகிறார். முதலில் இது நடந்தது. பின்பு என்ன ஆனது, பின்பு என்ன ஆனது... அப்படி அப்பொழுது ஆர்வம் அதிகரிக்கிறது இல்லையா? அதைப் போல் பரசிந்தனை என்ன இருக்கிறதோ அதுவும் ஒரு ஆர்வம் ஏற்படுத்துவதாக இருக்கிறது. அதில் மற்றவர் அவசியம் இந்த மாதிரி யோசிப்பார். பின்பு என்ன ஆனது, பின்பு அப்படி ஆனது, ஆம் அப்படி ஆகியிருந்திருக்கும்... அப்படி இதுவும் கதை மிக நீளமானது. பாப்தாதாவோ அனைவரின் உள்ளத்திலிருக்கும் விசயங்களைக் கேட்கவும் செய்கிறார். பார்க்கவும் செய்கிறார். எவ்வளவு தான் மறைப்பதற்கு முயற்சி செய்தாலும் பாப்தாதா அங்கங்கே கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காக, வெளிப்படையாக சமிக்ஞை கொடுப்பதில்லை, மற்றபடி அனைத்தையும் தெரிந்திருக்கிறார். அனைத்தையும் ஒருவர் பார்க்கிறார். யார் எவ்வளவு தான் இல்லை என்றும், நானோ ஒருபொழுதும் அப்படிச் செய்யவில்லை என்று கூறினாலும் பாப்தாதாவிடம் பதிவேடு இருக்கிறது. எத்தனை தடவை செய்தீர்கள் என்னென்ன செய்தீர்கள். எந்த நேரம் செய்தீர்கள், எத்தனை பேருடன் செய்தீர்கள் என்ற இந்த அனைத்தும் பதிவேட்டில் இருக்கிறது. சில நேரம் அமைதியாக மட்டும் இருக்க வேண்டியதாக இருக்கிறது. அப்படி இன்னொரு விசயம் பரசிந்தனையைப் பற்றி கூறினோம். அவருக்கு சுயசிந்தனை ஒருபொழுதும் இருக்காது. எந்தவொரு விசயம் இருந்தாலும் பரசிந்தனை செய்பவர்

தன்னுடைய தவறையும் மற்றவர்கள் மேல் போடுவார். மேலும் பரசிந்தனை செய்பவர் விசயங்களை உருவாக்குவதில் நம்பர் ஒன் ஆக இருப்பார். தன்னுடைய முழுமையான தவறை மற்றவர்கள் செய்தததாக அந்த மாதிரி நிரூபிப்பார்கள். கேட்கக் கூடிய பெரியவர்களுக்கும் ஒன்றும் பேசாமல் இருக்க வேண்டியதாக ஆகி விடுகிறது. ஞானத்தின் பாய்ன்ட்டுகளை மீண்டும் நினைவில் கொண்டு வருவது அல்லது ஞானத்தின் பாய்ன்டுகளை கேட்டு விட்டோம், மற்றவர்களுக்கு சொல்லி விட்டோம் என்ற இது மட்டும் சுயசிந்தனை இல்லை ஆனால் சுயசிந்தனை என்றால் தன்னுடைய சூட்சும பலஹீனங்களை சிந்தித்து அகற்றுவது, பரிவர்த்தனை செய்வது இது தான் சுய சிந்தனை. மற்றபடி ஞானம் சொல்வது மற்றும் கேட்பது அதிலேயோ அனைவரும் திறமை உள்ளவர்கள். அது ஞானத்தின் சிந்தனை ஆகும் ஆனால் சுயசிந்தனையின் நுணுக்கமான அர்த்தம் தன்னைப் பற்றியதாகும். எனென்றால் எப்பொழுது ரிசல்ட் வெளியாகுமோ அந்த ரிசல்ட்டில் இவர் ஞானத்தின் சிந்தனûயை நன்றாகக் செய்தார் அல்லது சேவையில் ஞானத்தை நன்றாக உபயோகித்தார் என்று இதையும் பார்க்கப்படும். இந்த ரிசல்ட்டிற்கு முன்பு சுயசிந்தனை மற்றும் பரிவர்த்தனை, சுயசிந்தனை செய்வதின் அர்த்தமே பரிவர்த்தனை செய்வது.

கடைசி முடிவின் மதிப்பெண்கள் முதலில் நடைமுறை தாரணை சொரூபத்திற்கும் கிடைக்கும். யார் தாரணை சொரூபமாக இருப்பாரோ அவர் இயற்கையான யோகியாக இருக்கவே செய்வார். ஒருவேளை மதிப்பெண்கள் அதிகமாகப் பெற வேண்டும் என்றால் முதலில் மற்றவர்களுக்கு என்ன கூறுகிறீர்களோ, இன்றைய நாட்களில் பண்புகளின் மேல் என்ன சொற்பொழிவு நிகழ்த்துகிறீர்களோ. அதை முதலில் தன்னுள் சோதனை செய்யுங்கள். ஏனென்றால் சேவைக்கான மதிப்பெண்களிலோ தாரணை சொரூபத்திற்கு பத்து மதிப்பெண்கள் இருக்கிறது. ஒருவேளை ஞானம் கொடுக்க முடியவில்லை. ஆனால் தன்னுடைய தாரணையினால் பிரபாவம் ஏற்படுத்துகிறீர்கள் என்றால், உங்களுடைய சேவையின் மதிப்பெண்கள் சேமிப்பாகி விட்டது இல்லையா? இன்றைய நாட்களில் எங்களுக்கு சேவையின் வாய்ப்பு மிகக் குறைவாகக் கிடைக்கிறது. எனக்கு வாய்ப்பு கிடைக்க வேண்டும், பிறருக்கு கிடைக்கிறது, எனக்கு ஏன் கிடைப்பதில்லை? சேவை செய்வது மிக நல்லது தான், ஏனென்றால் ஒருவேளை புத்தி ஒருவேலையுமின்றி சுதந்திரமாக இருக்கிறது என்றால் வீணான எண்ணங்கள் அதிகம் வரும். எனவே சேவையில் புத்தி பிஸியாக இருப்பது ஒரு நல்ல வழியாகும். சேவை செய்வதற்கான ஊக்கம் இருப்பதோ நல்லது தான். ஆனால் நாடகப்படி அல்லது சூழ்நிலையின் அனுசாரம் உங்களுக்கு ஒருவேளை வாய்ப்பு கிடைக்கவில்லை, மேலும் உங்களுடைய (மன) நிலை மற்றவர்களுக்கு சேவை செய்வதற்குப் பதிலாக உங்களையே கீழே கொண்டு வந்து விடுகிறது அல்லது அந்த சேவை உங்களை குழப்பத்தில் கொண்டு வந்து விடுகிறது என்றால் அது என்ன சேவை? அந்த சேவையின் உடனடிப்பலனாக என்ன கிடைக்கும்? உண்மையான சேவை, அன்போடு செய்யப்படும் சேவை, அனைவரின் ஆசீர்வாதங்களைப் பெற வைக்கும் சேவை, அதனுடைய உடனடிப் பலனாக குஷி இருக்கும். மேலும் ஒருவேளை சேவையில் ஃபீலிங் (உணர்ச்சிவசப்படுவது) வந்து விடுகிறது என்றால், இங்கு பிராமணர்கள் ஃபீலிங்கை என்னவென்று கூறுகிறார்கள்? ஃப்ளூ என்று தான் கூறுகிறார்கள். ஃப்ளூ நோய் உள்ளவர் என்ன செய்வார்? தூங்கி விடுவார். உணவு

அருந்த மாட்டார் தூங்கி விடுவார். இங்கேயும் ஃபீலிங் வருகிறது என்றால், ஒன்று உணவு அருந்த மாட்டார் அல்லது கோபித்துக் கொண்டு எங்காவது சென்று அமர்ந்து விடுவார். அப்படி இது ஃப்ளூ நோய் ஆகிறது இல்லையா? ஒருவேளை நீங்கள் தாரணை சொரூபமானவராக இருக்கிறீர்கள். ஒன்று நன்மை ஏற்பட வேண்டும் என்ற பாவனையோடு செய்யப்படும் சேவை மற்றும் இன்னொன்று சுயநலத்தோடு செய்யும் சேவை. என்னுடைய பெயர் வந்து விடும். என்னுடைய புகைப்படம் செய்தித்தாளில் வந்து விடும் என்னுடைய போட்டோ டி.வியில் வந்து விடும், பிராமணர்களிடையே எனக்கு பெயர் கிடைக்கும், சகோதரி என்னை மிகவும் முன்னுக்கு வைப்பார். என்னை விசாரிப்பார்.... இந்த அனைத்து விதமான உணர்வுகள் சுயநலமாக செய்யும் சேவையினுடையவை. ஏனென்றால் இன்றைய கணக்குப்படி பிரத்யஷம் ஏற்படும் கணக்குப்படி இப்பொழுது சேவை உங்களிடம் தானாகவே வரும், தொடக்கத்தில் ஸ்தாபனையின் விசயம் வேறாக இருந்தது ஆனால் இப்பொழுது நீங்கள் சேவையின் பின்னால் செல்ல மாட்டீர்கள். சேவை சுயம் உங்களைத் தேடி வரும். அப்படி யார் உண்மையான சேவாதாரியாக இருக்கிறாரோ அந்த சேவாதாரிக்கு வேறு ஏதாவது சேவை கிடைக்கவில்லை என்றாலும் தன்னுடைய முகம் மற்றும் நடத்தை மூலம் சேவை செய்யுங்கள் என்று பாப்தாதா கூறுகிறார். உங்களுடைய முகம் தந்தையின் சாட்சாத்காரம் செய்விக்கட்டும். உங்களுடைய முகம், உங்களுடைய நடத்தை தந்ûயை நினைவூட்ட வேண்டும். இந்த சேவை தான் நம்பர் ஒன் ஆகும். அந்த மாதிரியா தன்னமில்லா சேவாதாரி ஆக வேண்டும். எனக்குத் தான் வாய்ப்பு கிடைக்க வேண்டும். ஏன் கிடைப்பதில்லை. கிடைக்க வேண்டும் அந்த மாதிரியான எண்ணங்களையும் சுயநலம் என்று தான் கூறுவோம். பிராமண பரிவாரத்தில் உங்களுடைய பெயர் புகழடைந்து இருக்கவில்லை, நல்ல சேவாதாரியாக இருந்தும் உங்களுடைய பெயர் வரவில்லை, ஆனால் தந்தையிடமோ பெயர் இருக்கிறது இல்லையா? எப்பொழுது தந்தையின் இதயத்தில் பெயர் இருக்கிறது என்றால் வேறு என்ன வேண்டும்? மேலும் தந்தையின் இதயத்தில் மட்டும் இல்லை, ஆனால் எப்பொழுது கடைசி சோதனை வருமோ அப்பொழுது உங்களுடைய நம்பர் முன்னுக்கு இருக்கும். ஏனென்றால் பாப்தாதா கணக்கு வைத்துக் கொள்கிறார். உங்களுக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. நீங்கள் சரியாகத்தான் இருக்றீர்கள். ஆனால் வாய்ப்பு கிடைக்கவில்லை என்றால் அதுவும் குறிப்பில் வந்து விடுகிறது. கேட்டு வாய்ப்பை பெற்று விட்டீர்கள், நல்லதே செய்தீர்கள், ஆனால் மதிப்பெண் குறைந்து விடும். தர்மராஜாவின் இந்த கணக்கு சாதாரணமானதல்ல. மிகவும் சூட்சுமமான கணக்கு வழக்கு. எனவே தன்னலமில்லா சேவாதாரி ஆகுங்கள், சுந நலம் கூடாது. நன்மை தரும் தன்னலம் இருக்கலாம். ஒரு வேளை உங்களுக்கு வாய்ப்பு கிடைத்தது. அடுத்தவர் தனக்கும் வாய்ப்பு வேண்டுமென விரும்புகிறார், அவரிடம் தகுதியும் உள்ளது. எனவே நீங்கள் உங்களது வாய்ப்பை அவருக்கு கொடுத்து விட்டீர்களேயானால் அவரது மார்க்கில் உங்களுக்கும் பங்கு கிடைக்கும். நீங்கள் சேவை செய்யாத போதும், தனது வாய்ப்பை பிறருக்கு கொடுத்ததால் அதிலிருந்தும் உங்களுக்கான பங்கு வந்து சேரும். ஏனெனில் உண்மையான வைரமாக வேண்டுமல்லவா? தந்தைக்கு எதையும் செய்ய வேண்டியது இல்லை தானாகவே நடந்து கொண்டிருக்கிறுது. சில நேரம் பாப்தாதா குழந்தைகளின் கணக்கை பார்க்கவும் செய்கிறார் அப்படி முதல் விசயம் பரமத் (மற்றவர்கள் சொல்லும் வழி) மற்றும் இரண்டாவது விசயம் சிந்தனை (மற்றவர்கள் .மற்ற

விசயங்களின் சிந்தனை)

மூன்றாவது விசயம் பரதர்ஷன் (மற்றவர்களைப் பார்ப்பது) மற்றவர்களைப் பார்ப்பதில் பெரும்பான்மையோர் மிகவும் திறமையானவர்கள் மற்றவர்களைப் பார்ப்பது அதாவது பார்க்கிறீர்கள் என்றால் பார்த்தற்குப் பின்பு அந்த விசயம் எங்கே செல்லும் புத்தியில் தானே செல்லும் மேலும் யார் மற்றவர்களைப் பார்ப்பதில் நேரத்தை செலவழிப்பாரோ அவருக்கு தன்னைப் பார்ப்பதற்கான நேரம் எங்கே கிடைக்கும்? விசயங்களோ அதிகம் நடக்கும் இல்லையா. மேலும் என்ன விசயங்கள் நடந்து கொண்டிருக்கின்றனவோ அவை பார்வையிலும் தென்படும். கேட்கவும் முடியும். எவ்வளவு பெரிய அமைப்போ அவ்வளவு பெரிய விசயங்கள் நடக்கும். இந்த விசயங்கள் ஏன் ஏற்படுகின்றன? இந்த விசயங்கள் நடக்கக் கூடாது என்று சிலர் நினைக்கிறார்கள், நடக்கக் கூடாது என்று எதைப் பற்றி நீங்கள் நினைக்கிறீர்களோ அதற்காக ஏன் நேரம் செலவழித்தீர்கள்? மேலும் இந்த விசயங்கள் தான் உங்களுடைய பரீட்சை ஆகும். எவ்வளவு பெரிய படிப்போ அவ்வளவு பெரிய பரீட்சையும் இருக்கும். இந்த சூழ்நிலை உருவாவது பரமத், பரதர்ஷன் அல்லது பரசிந்தனையிலிருந்து தன்னை எவ்வளவு பாதுகாப்பாக வைத்துக் கொள்வது என்ற இது அனைவருக்குமான பரீட்சை ஆகும். இரண்டு விசயங்கள் வேறு வேறானவை ஒன்று பொறுப்பு அதன் காரணமாக கேட்கவும் வேண்டியதிருக்கிறது. பார்க்கவும் வேண்டியதிருக்கிறது. அதை நன்மை பயக்கும் பாவனையோடு கேட்க வேண்டும் மற்றும் பார்க்க வேண்டும். பொறுப்பு இருக்கிறது, நன்மை பயக்கும் பாவனை இருக்கிறது என்றால் அது சரி தான் ஆனால் தன்னுடைய மனநிலையை குழப்பத்தில் கொண்டு வந்து பார்ப்பது, கேட்பது அல்லது நினைப்பது என்ற இது தவறாகும். ஒருவேளை நீங்கள் உங்களை பொறுப்பானவர் என்று நினைக்கிறீர்கள் என்றால் பொறுப்பிற்கு முன்பு தன்னுடைய பிரேக்லிஜ (நிறுத்தும் சாதனத்தை) சக்தி நிறைந்ததாக ஆக்குங்கள் எப்படி மலை மேல் ஏறுகிறார்கள் என்றால் தன்னுடைய பிரேக்கை சரியாக சோதனை செய்து கொள்ளுங்கள் என்று முன்பாகவே அறிவிப்புக் கொடுக்கிறார்கள். அப்படி பொறுப்புக் கூட ஒரு உயர்ந்த நிலை ஆகும். பொறுப்பை நன்றாக எடுத்துக் கொள்ளுங்கள் ஆனால் ஒரு நொடியில் புள்ளி விழுகிறதா என்ற இதைச் சோதனை செய்யுங்கள். அல்லது வைக்கிறீர்கள் புள்ளி. ஆனால் விழுந்து விடுகிறது கேள்விக்குறி? அது தவறு ஆகும். அதில் நேரம் மற்றும் சக்தி வீணாகி விடும். எனவே முதலில் தன்னுடைய பிரேக்கை சக்திசாலியானதாக ஆக்குங்கள். பார்த்தீர்கள், கேட்டீர்கள் எவ்வளவு முடியுமோ அந்தஅளவு நன்மை செய்தீர்கள். அது சரி தான் முற்றுப்புள்ளி வைத்து விடுங்கள். ஒருவேளை அந்த மாதிரியான மனநிலை உங்களிடம் இருக்கிறது என்றால் பொறுப்பை எடுத்துக் கொள்ளுங்கள் இல்லை என்றால் பார்த்தும் பார்க்காதீர்கள், கேட்டும் கேட்காதீர்கள். சுயசிந்தனையில் இருங்கள். இதில் தான் லாபம் இருக்கிறது. ஆக இன்றைய பாடம் என்னவாக இருந்தது? பரமத், பரசிந்தனை மற்றும் பரதர்ஷன். இந்த மூன்று விசயங்களிலிருந்து விடுபடுங்கள் மற்றும் ஒரு விசயத்தை தாரணை செய்யுங்கள். அந்த ஒரு விசயம் பரோபகாரி (அனைவருக்கும் உதவி செய்பவர்கள்) ஆகுங்கள். மூன்று விதமான மற்றதை அகற்றுங்கள் மற்றும் ஒரு மற்றதை அதாவது மற்றவர்களுக்கு உதவுபவர்கள் ஆகுங்கள். ஆகத் தெரியுமா? அப்படியானால் எந்த விசயத்திலிருந்து விடுபடுவீர்கள்? மாதர்கள் என்ன செய்வீர்கள்? (தன்னுடைய) குழந்தைகளின் உபகாரியாகவா அல்லது

மற்றவர்களின் உபகாரியாக ஆவீர்களா? அனைவரின் உபகாரியாக ஆக வேண்டும். சுலபமா அல்லது கடினமா? நல்லது

வரதானம் : மகாவீரர் ஆகி சஞ்சிவினி மருந்தின் மூலம் மயக்கம் அடைந்தவர்களை
புத்துயிர் அடைய வைக்கக்கூடிய சக்தி நிறைந்தவர் ஆகுக

எப்படி சூரியன் தானாகவே சக்தி நிறைந்திருக்கிறது. மேலும் தனது சக்திகள் மூலமாக நாலா பக்கமும் தனது சக்தியின் பிரகாசத்தை பரப்புகிறது. அதே மாதிரி சக்தி நிறைந்தவர் ஆகி மயக்கமாக இருக்கின்ற அநேகருக்கு சஞ்சிவினி மருந்தின் மூலமாக அவர்களின் மயக்கத்தை யார் தெளிய வைக்கின்றார் களோ அவர்கள் தான் மாகாவீரர். நான் வெற்றி அடைவேன் என்பதை எப்போதும் நினைவில் வையுங்கள். மேலும் அனைவரையும் வெற்றியாளராக உருவாக்குவேன். வெற்றி அடைவதற்கான சாதனம் எப்போதும் சுறுசுறுப்பாக (பிஸி) இருப்பது. சுயத்திற்கும், உலகத்திற்கும் நன்மை செய்யும் காரியத்தில் பிஸியாக இருந்தால் தடைகளற்ற சூழ்நிலை (விக்னவிநாசக் வாயுமண்டலம்) உருவாகி விடும்.

சுலோகன்: மனம் எப்போதும் திலாராமிடம் ஈடுபட்டுள்ளதோ - அது தான் உண்யைமான தபஸியா